கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)

திருமங்கலம்.

2026ம் வருடம் ஜனவரி மாதம் 30ம் தேதி வெள்ளிக்கிழமை

E.A No.5/2025

இன்

E.P. No.12/2020

----

அமுதா ... மனுதாரர்/மனுதாரர்/வாதி

/எதிர்/

சுந்தரக்குமார் (இறப்பு) ... 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி

1) சீதாலெட்சுமி

2) சந்திரமூர்த்தி

3) விஜயலெட்சுமி ... 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/
2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்

இறுதியாக, இம்மனுவானது 23.01.2026ல் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை

செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்/மனுதாரர்/வாதியால் நிறைவேறுதல் மனுவின் சொத்து விபரத்தில் திருத்தம் செய்ய வேண்டி கட்டளை 6 விதி 17ன் மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

1.1) அசல் வழக்கானது வாதியால் கடந்த 2009ம் ஆண்டு பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வாதிக்கு ஆதரவாக 29.11.2019ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் இத்தீர்ப்பாணையை எதிர்த்து திருமங்கலம், சார்பு நீதிமன்றத்தில் AS எண்.17/2020 என்ற மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்து, அந்த மேல்முறையீடு வழக்கு 06.10.2025 அன்று பகுதியாக மட்டும் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், CG என குறிப்பிடப்பட்டுள்ள Ex–C1 தோராயமான வரைபடப் பகுதியைக் குறிப்பிடுவதன் மூலம் 2 அடிக்கு பதிலாக 1 1/2 அடிக்கு வாதிக்கு உரிமை உண்டு என்ற மாற்றத்துடன் மேல்முறையீட்டை பகுதியாக அனுமதித்தது

என்றும், அதன்படி, Ex–C1 இல் CG என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் கூறப்பட்ட 1 1/2 அடிக்கு ஆணையை நிறைவேற்ற வேண்டும் என்றும், மேலும் அந்த வகையில் நிறைவேற்று மனுவில் சொத்து விவரத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர் கூறுவது போல் சமூகம் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணையை மேல்முறையீட்டு நீதிமன்றம் ரத்து செய்துவிட்ட நிலையில், அந்த தீர்ப்பாணை நிறைவேற்ற இயலாது என்பதால் மனுதாரர் இந்த நிறைவேறு மனுவை திரும்ப பெற்றுக்கொண்டுவிட்டு சார்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணையின் படிதான் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அதனை விடுத்து இந்த நிறைவேறுதல் மனுவில் அதனை நிறைவேற்ற இயலாது என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என குறப்பிடப்பட்டுள்ளது.

**3) <u>தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) மனுதாரர்/மனுதாரர்/வாதி தனது மனுவில், நிறைவேறுதல் மனுவின் சொத்து விவரத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும், எனவே, நிறைவேறுதல் மனுவில் மேற்படி சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.2) அசல் வழக்கு எண்.459/2009 தீர்ப்புரையானது மாண்புமை திருமங்கலம், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு AS எண்.17/2020 மேல்முறையீட்டில் பகுதியாக அனுமதிக்கப்பட்டு உத்தரவாகி உள்ளது. மேலும், மேற்படி மேல்முறையீடு தீர்ப்பில் பிரதிவாதியின் ஆக்கிரமிப்பானது 1 1/2 அடி என்று குறிப்பிட்டு பகுதியாக அனுமதிக்கப்பட்ட நிலையில், அசல் நிறைவேறுதல் மனுவில் மேற்படி ஆக்கிரமிப்பு விஸ்தீரணம் மேற்படி 2 அடி நிலத்தை 1 1/2 அடி நிலம் தான் என்று மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பித்த நிலையில், மேற்படி மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புரைப்படி அசல் நிறைவேறுதல் மனுவில் பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பை பொறுத்து சீர்திருத்தம் செய்வது அவசியம் என்றும், அதன்படி 3வது இலக்க சொத்தை குறிப்பிட்டு, ஆக்கிரமிப்பு 1 1/2 அடி என்று சீர்திருத்தம் செய்ய மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.3) மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்களின் அடிப்படையில் அசல் வழக்கின் தீர்ப்புரையானது, மாண்புமை திருமங்கலம், சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு மனுவில் பகுதியாக அனுமதிக்கப்பட்ட நிலையில், அசல் நிறைவேற்று மனுவை சீர்திருத்தம் செய்வது சட்டப்படியானது ஆகும். மேலும், மனுதாரர் பிரதிவாதி ஆக்கிரமித்தாக கூறும் நிலம் 1  1/2 அடி என்று மட்டும் சீர்திருத்தம் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் நிறைவேற்று மனுவில் மேல்முறையீட்டு காலத்தில் மேல்முறையீடு குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. மேல்முறையீடு குறித்த விவரங்கள் பற்றி மேற்படியான சீர்திருத்தம் செய்ய வேண்டியது சட்டப்படியானது என்ற நிலையில், மனுதாரர் தரப்பில் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. அதன்படி இம்மனு உரிய சட்ட முறைப்படி வடிவமைக்கப்படவில்லை. சட்டப்படியாக அசல் நிறைவேறுதல் மனுவில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் முழுமையாக மேற்படி மனுதாரர் மனுவில் பரிகாரம் கோராத நிலையில், இம்மனு உரிய முறையில் வடிவமைக்கப்படாத நிலையில், இம்மனு சட்டப்படி அனுமதிக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.30 17:50:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**இணைப்பு:**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.30 17:50:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.5/2025
இன்
நிறைவேறுதல் மனு எண்.12/2020
அசல் வழக்கு எண்.459/2009
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 30.01.2026